இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNPA601– விசேட தேவைகள் சார் கல்வியில் உளவியல் அடிப்படைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 24.02.2024 **நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30**

எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

1. "மரபணுப்பின்னணி, ஆளுமைப் பண்புகள் மற்றும் உள் எண்ணங்கள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் எந்தவொரு நபரும் அவர்களின் உடல் திறன்களின் வரம்புகளுக்குள் எந்தவொரு பணியையும் செய்ய பயிற்சியளிக்க முடியும் என்று நடத்தை நிபுணர்கள் நம்புகிறார்கள்."

   (அ) அறிதல்சார் கற்றல் கொள்கைகளுக்கு எதிராக நடத்தைவாத கற்றல் கொள்கைகளை வேறுபடுத்துக.
   **(20 புள்ளிகள்)**

   (ஆ) தொழிலி நிபந்தனைப்பாட்டு மற்றும் பழைய நிபந்தனைப்பாட்டு கற்றல் கொள்கைகளின் அடிப்படைக் கோட்பாடுகள் எவ்வாறு விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட குழந்தைகளுக்குக் கற்பிக்கப் பயன்படுகின்றன என்பதை பரீட்சிக்க.
   **(40 புள்ளிகள்)**

   (இ) மன இறுக்கம் (ஒட்டிஸம்) மற்றும் விருத்தியில் தாமதம் உள்ள குழந்தைகளுக்கு புதிய திறன்களைப் பெற உதவும் ஒரு சிகிச்சை நுட்பமாக நடத்தை பகுப்பாய்வு எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதை விளக்குக.
   **(40 புள்ளிகள்)**

2. (அ) பிராய்டின் உளப்பகுப்பாய்வு கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளை சுருக்கமாக விளக்குக.
   **(20 புள்ளிகள்)**

   (ஆ) பிராய்டின் உளப்பகுப்பாய்வு கோட்பாட்டின்படி விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட குழந்தைகளின் விருத்தி சவால்களை ஆசிரியர்கள் எவ்வாறு அடையாளம் காண முடியும் என்பதை பரீட்சிக்க.
   **(40 புள்ளிகள்)**

   (இ) விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட குழந்தைகளின் ஆளுமை மேம்பாட்டிற்கு ஆசிரியர்கள் எவ்வாறு உதவலாம் என்பதை ஆளுமை விருத்தியின் கோட்பாடுகளுக்கு ஏற்ப மூன்று (03) எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.
   **(40 புள்ளிகள்)**

3. (அ) இயலாமைகள் உள்ள மாணவர்கள் எதிர்கொள்ளும் உளவியல் - சமூக பிரச்சினைகள் என்ன என்பதை பரீட்சிக்க.

(20 புள்ளிகள்)

(ஆ) எரிக்சனின் உள – சமூக விருத்திக் கோட்பாட்டை ஆராய்ந்து, விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட குழந்தைகள் ஒவ்வொரு நிலையிலும் உளவியல் - சமூக நெருக்கடிகளை ஏன் எதிர்கொண்டார்கள் என்பதை ஆராய்க.

(40 புள்ளிகள்)

(இ) தற்போதைய சமூகத்தில் இயலாமைக்கான சமூக மனப்பாங்குகள் மற்றும் இயலாமைகள் உள்ளவர்களுக்கு அதன் விளைவுகள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்க.

(40 புள்ளிகள்)

4. (அ) இயலாமைகள் உள்ள குழந்தைகளின் உளவியல் - சமூக நல்வாழ்வை பாதிக்கும் காரணிகள் யாவை?

(20 புள்ளிகள்)

(ஆ) இயலாமைகள் உள்ள குழந்தைகளிடம் பெற்றோரின் மனவெழுச்சி எதிர்வினைகளை விளக்குக. மற்றும் அவர்களின் உளவியல் - சமூக விருத்தியில் அதன் தாக்கத்தை பரீட்சிக்க.

(40 புள்ளிகள்)

(இ) நான்கு (04) உத்திகளைப் பரிந்துரைத்து, விசேட தேவைகள் குழந்தைகளின் நல்வாழ்வுக்காக பெற்றோரின் மனவெழுச்சி எதிர்வினைகளைச் சமாளிக்கும் வகையில், மேலே குறிப்பிட்டுள்ள உத்திகளை நீங்கள் எவ்வாறு செயல்படுத்தலாம் என்பதை விளக்குக.

(40 புள்ளிகள்)

-முழுப்பதிப்புரிமை பெற்றது -